முக்கிய வார்த்தைகள்:
*தியாகம் செய்*
*சுயநலம் / தன்னலம்*
*முன்னுரிமை*
*சமநிலையான*

**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**29 மே 2026 / 12 துல்ஹஜ் ஹிஜிரி 1447**

# சுயநலத்தைத் தியாகம் செய்து, ஒற்றுமையைப் பலப்படுத்துதல்

ٱلْحَمْدُ لِلَّهِ ٱلَّذِي هَدَانَا لِهَٰذَا وَمَا كُنَّا لِنَهْتَدِيَ لَوْلَا أَنْ هَدَانَا ٱللَّهُ. أَشْهَدُ أَنْ لَا إِلَٰهَ إِلَّا ٱللَّهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. ٱللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ، وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ ٱللَّهِ، ٱتَّقُوا ٱللَّهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُونَ.

**ஜும்ரதல் முஃமினீன் ரஹிமகுமுல்லாஹ் [ஓரிறை நம்பிக்கையாளர்களின் சமுதாயமே அல்லாஹ் உங்களுக்கு அருள் புரிவானாக!]**
அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீது உண்மையான பக்தி கொண்டு, அல்லாஹ்வைப் பயந்து கொள்வோமாக; அல்லாஹ்வின் அனைத்து கட்டளைகளுக்கும் அடிபணிந்து, அல்லாஹ் தடைசெய்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வோமாக. அல்லாஹ்வுக்கு நாம் அடிபணிந்து நிறைவேற்றும் ஒவ்வொரு செயலையும் வணக்க, வழிபாடுகளையும் அல்லாஹ் ஏற்றுக் கொள்வானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**எனது அன்பிற்குரிய, ஓரிறை நம்பிக்கையின் சகோதரர்களே!**
"ஈதுல் அள்ஹா" ஹஜ்ஜுப் பெருநாளின் இப்புனிதமிக்க பருவ காலத்தில் குர்பானி எனப்படும் **தியாகச் செயலை** பல முஸ்லிம்கள் நிறைவேற்றி வருகிறார்கள். குர்பானிச் சடங்கில், பிராணிகளை அறுத்துப்

பலியிடுவதையும் கடந்து, மற்றொரு முக்கியமான **தியாகச் சிந்தனை** காணப்படுகிறது. அதுதான், **சுயநலச் சிந்தனையைத்** தவிர்த்து, மற்றவர்களின் நலனுக்கு **முன்னுரிமை** கொடுப்பதாகும். இதுதான், இன்றைய குத்பா பிரசங்கத்தின் முக்கிய செய்தியாகும்.

**எனது அன்பிற்குரிய சகோதர, சகோதரிகளே!**

இறைத்தூதர் இப்ராஹிம் [அலை] மற்றும் இறைத்தூதர் இஸ்மாயீல் [அலை] ஆகியோரின் வரலாற்றில் நாம் சிந்தனை செய்வோமாக! அவர்களின் வரலாற்றில், **தியாகம்** செய்வதற்கும், அல்லாஹ்வுக்கு அடிபணிந்து நடப்பதற்கும் மிகச் சிறந்த முன்மாதிரி இருப்பதை நாம் காண்கிறோம். இறைத்தூதர் இப்ராஹிம் [அலை] அவர்கள், பிள்ளை பாக்கியம் கேட்டு நீண்ட காலமாக அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்தார்கள். ஆனால், அவர்கள் தனது முதுமைப் பருவத்தை அடைந்த பின்பு தான், அவர்களின் பிரார்த்தனை ஏற்றுக் கொள்ளப்பட்டது. முதுமைப் பருவத்தில், இறைத்தூதர் இஸ்மாயீல் [அலை] எனும் பாசத்திற்குரிய மகனை அல்லாஹ் அவர்களுக்கு வழங்கினான். எனினும், மகன் இஸ்மாயீல் [அலை] அவர்கள் தனது தந்தையுடன் வேலை செய்யும் பருவத்தை அடைந்த போது, ஒரு கடுமையான கட்டளை அல்லாஹ்வின் புறத்திலிருந்து இப்ராஹிம் [அலை] அவர்கள் மீது ஏற்படுத்தப்பட்டது. அக்கட்டளையைப் பற்றி, அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா திருக்குர்ஆனின் "அஸ்-ஸாஃப்ஃபாத்" எனும் அத்தியாயத்தின் 102-வது வசனத்தில் பின்வருமாறு கூறுகிறான்:

فَلَمَّا بَلَغَ مَعَهُ ٱلسَّعْىَ قَالَ يَٰبُنَىَّ إِنِّىٓ أَرَىٰ فِى ٱلْمَنَامِ أَنِّىٓ أَذْبَحُكَ فَٱنظُرْ مَاذَا تَرَىٰ ۚ قَالَ يَٰٓأَبَتِ ٱفْعَلْ مَا تُؤْمَرُ ۖ سَتَجِدُنِىٓ إِن شَآءَ ٱللَّهُ مِنَ ٱلصَّٰبِرِينَ ﴿١٠٢﴾

பொருள்: *பின்பு, [அம்மகன்] அவருடன் நடமாடக்கூடிய [வயதை அடைந்த] போது, அவர் [இப்ராஹிம்] கூறினார்: "என்னருமை மகனே! நான் உன்னை* ***அறுத்துப் பலியிடுவதாக*** *நிச்சயமாகக் கனவு கண்டேன்; இதைப் பற்றி உன்*

*கருத்து என்ன என்பதைச் சிந்திப்பாயாக! ”[மகன்] கூறினார்: என்னருமைத் தந்தையே! நீங்கள் ஏவப்பட்டபடியே செய்யுங்கள்; அல்லாஹ் நாடினால் - என்னை நீங்கள் பொறுமையாளர்களில் நின்றுமுள்ளவனாகவே காண்பீர்கள்”*

**அன்பிற்குரிய சகோதரர்களே!**

இறைத்தூதர் இப்ராஹிம் [அலை] அவர்களும் அவர்களின் மகனார் இறைத்தூதர் இஸ்மாயீல் [அலை] அவர்களும் தமது **சுயநலத்துக்கு** முன்னுரிமை கொடுத்தார்களா? அவர்கள் நினைத்திருந்தால் அல்லாஹ்வின் இக்கட்டளையை நிறைவேற்றாமல் இருந்திருக்க லாமல்லவா?

இறைத்தூதர் இப்ராஹிம் [அலை] அவர்கள் இக்கட்டளையை நிறைவேற்றத் தயங்கியிருக்கலாம்; நீண்ட நாட்களாக ஏக்கத்துடன் காணப்பட்டு, அல்லாஹ்விடம் வேண்டிக் கேட்டுப் பெற்ற ஒரு மகனை **அறுத்துப் பலியிடுவதைத்** தாங்கிக் கொள்ள முடியாத நிலையில் அவர்கள் இருந்திருக்கலாம்; அவ்வாறே, இறைத்தூதர் இஸ்மாயீல் [அலை] அவர்கள், தனது இளமைப் பருவத்தை நினைத்தும், தனது வருங்கால வாழ்க்கையை நினைத்தும் இக்கட்டளையை நிராகரித்திருக்கலாம். ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யவில்லை.

சுருங்கக் கூறின், தற்போது ஓதப்பட்ட வசனமாகிறது, இறைத்தூதர் இப்ராஹிம் [அலை] மற்றும் இறைத்தூதர் இஸ்மாயீல் [அலை] ஆகியோரின் உறுதியான ”ஈமான்” எனும் ஓரிறை நம்பிக்கையையும், அவர்கள் அல்லாஹ்வுக்கு அடிபணிந்து நடந்ததையும் மட்டும் சுட்டிக் காட்டவில்லை, மாறாக, அத்துடன், அல்லாஹ்விடம் நன்மையைப் பெறுவதற்காகவும், அவனது திருப்தியைப் பெறுவதற்காகவும் தமது **சுயநலத்தைத் தியாகம்** செய்ய அவர்கள் தயாராக இருந்ததையும் சுட்டிக் காட்டுகின்றது.

**அன்பிற்குரிய சகோதரர்களே!**

இதுதான், நாம் நமது அன்றாட வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய ”ஈதுல் அள்ஹா” வின் உண்மையான உயிரோட்டமாகும். தற்கால உலகில் தனிநபர் சார்ந்த மதிப்பீடுகளுக்கும் விழுமியங்களுக்கும் முக்கியத்துவம் கொடுப்பது

அதிகரித்து வருகிறது. சிலரிடம் **சுயநலம்** எந்த அளவுக்கு அதிகரித்து விட்டதென்றால், வாழ்க்கைப் போராட்டத்துடன் காணப்படும் மற்றவர்களின் நிலைமையைக் கவனத்தில் கொள்வதில்லை; அநேகமாக, நம்மில் சிலர், *எனக்கு என்ன கிடைக்கும்?* என்றே அதிகமாகக் கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். *மற்றவர்கள் என்னிடமிருந்து தேவைப்படும் விஷயம் என்ன?* மற்றவர்களுக்கு நான் என்ன செய்ய வேண்டும்? எனக் கேட்பதில்லை.

இறைத்தூதர்[ஸல்] அவர்கள் நவின்றுள்ளார்கள்:

لاَ يُؤْمِنُ أَحَدُكُمْ حَتَّى يُحِبَّ لِأَخِيهِ مَا يُحِبُّ لِنَفْسِهِ

பொருள்: *"உங்களில் ஒருவர், தனக்கு விரும்புவதையே தனது சகோதரனுக்கும் விரும்பாத வரை, பரிபூரணமான முஃமினாக [ஓரிறை நம்பிக்கையாளராக] ஆக முடியாது"* [ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்கள்: இமாம் புகாரி ரஹ், இமாம் முஸ்லிம் ரஹ்]

திருக்குர்ஆனின் "அல்-ஹஷ்ர்" எனும் அத்தியாயத்தில், மதீனா நகரின் நபித் தோழர்களாகிய அன்ஸாரிகளை அல்லாஹ் புகழ்ந்து கூறுகிறான். தமக்குத் தேவையிருந்த போதிலும், மற்றவர்களுக்கு அவர்கள் **முன்னுரிமை** கொடுத்து, அவர்களுக்குத் தாராள மனப்பான்மையுடன் உதவ முன் வந்ததை அல்லாஹ் பாராட்டுகிறான்.

**அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே!**

**தியாகத்தின்** உயிரோட்டத்தை நம்மில் சிறப்பாக ஏற்படுத்திக் கொள்வதற்காக, இரண்டு முக்கியப் பாடங்களை இப்பிரசங்கம் எடுத்துரைக்க உள்ளது:

**முதலாவதாக: தேவையுள்ளவர்களின் கண்ணோட்டத்தில் பார்க்கக் கற்றுக் கொள்வது.**

இன்று உலகில் ஏற்படும் பெரும்பாலான அழிவுகளுக்குக் காரணம், பேராசையும் **சுயநலமும்** ஆகும். சிலர், தமக்கு இலாபம் ஈட்டுவதற்காகவும், தன்னலத்துக்காகவும் மற்றவர்களுக்கு எதிராக அநீதம் செய்யவும், அடக்குமுறை செய்யவும் விரும்புகிறார்கள். சிலர், தம்மிடம் ஏராளமான செல்வங்களைப் பெற்றிருந்த போதிலும், அவற்றில் சிலவற்றைத் தேவையுள்ளவர்களுக்குக் கொடுக்கவோ பகிர்ந்து கொள்ளவோ விரும்புவதில்லை. சிலர், மற்றவர்களின் கஷ்டங்களையும் துன்பங்களையும் கண்ணால் கண்டும் கூட, அவற்றைக் கவனத்தில் கொள்வதில்லை.

இறைத்தூதர்[ஸல்] அவர்கள் நவின்றுள்ளார்கள்:
*அண்டை வீட்டார் பசியோடு இருக்கும் போது, தான் மட்டும் வயிறார உண்பவன், உண்மையான முஃமினாக [ஓரிறை நம்பிக்கையாளராக] இருக்க முடியாது"* [ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் அபூயஃலா ரஹ்]

தற்காலத்தில், பொருளாதாரச் சவால்கள் அதிகரித்து வருகின்றன; பலர் வாழ்க்கைச் செலவுகள், வேலையின் அழுத்தங்கள், நிதி விவகாரங்கள் ஆகியவற்றைச் சமாளிக்கப் போராடுகிறார்கள்; எனவே, **சுயநலத்தை அடிப்படையாகக்** கொண்டு, ஒரு உறுதியான சமுதாயத்தை உருவாக்க முடியாது. ஒருவர் மற்றவருக்கு உதவிக் கொள்வதன் மூலமாகவே அப்படிப்பட்ட சமுதாயத்தை உருவாக்க முடியும்.

எப்போதும் பெரிய அளவிலான உதவிகளைத் தான் செய்ய வேண்டுமென்பதல்ல; தேவையுள்ளவர்களின் நிலைமையை அறிதல், குடும்பத்தில் முடியாமலிருக்கும் உறுப்பினர்களுக்கு உதவுதல், நம்மிடத்தில் இருப்பதைப் பகிர்ந்து கொள்வது, புன்னகையுடன் சந்தித்தல், அன்பான வார்த்தைகளைப் பேசுதல் போன்ற சிறிய உதவிகளைக் கூட செய்யலாம். செய்யப்படும் உதவிகள் சிறிய அளவில் இருந்தாலும், அவற்றை மனப்பூர்வமாகச் செய்தால் மக்களுக்கு மத்தியிலான உறவுகளை அவை பலப்படுத்தும்.

**இரண்டாவதாக: சமநிலையானப் போக்கைக் கடைப்பிடிக்குமாறு இஸ்லாம் நமக்குப் போதிக்கிறது.**

மற்றவர்களுக்கு நாம் **முன்னுரிமை** கொடுக்க வேண்டும் என்பதன் பொருள், நம்மை நாம் புறக்கணித்து விட வேண்டுமென்பதல்ல. அல்லாஹ் சுப்ஹானஹூ வதஆலா, திருக்குர்ஆனின் "அல்-இஸ்றா" எனும் அத்தியாயத்தின் 29-வது வசனத்தில் கூறுகிறான்:

*"[உலோபியைப் போல் மற்றவருக்கு எதையும் கொடுக்காமல்] உம் கையை உமது கழுத்தில் கட்டப்பட்டதாக்கிக் கொள்ளாதீர்; அன்றியும், [அனைத்தையும் செலவழித்து உம் கையை] ஒரே விரிப்பாக விரித்து விடாதீர்; அதனால் நீர் நிந்திக்கப்பட்டவராகவும், [கையில் எதுமில்லாது] வருந்துபவராகவும் ஆகி விடுவீர்"*

இஸ்லாம் **சமநிலையான** வாழ்க்கையை அமைத்துள்ளது. அந்த **சமநிலையான** வாழ்க்கையை நாம் கடைப்பிடித்தால் நமது நலனையும் பாதுகாத்துக் கொள்ளலாம்; நம்மைச் சுற்றியுள்ளவர்களுக்கும் பயனளிக்கலாம். நமது வாழ்க்கையும் நமது குடும்பத்தார்களின் வாழ்க்கையும் அமைதிமிக்கதாக ஆகி விடும். அதன் காரணமாக, சமுதாயம் ஒன்றுபட்டு, உறுதியாகி விடும்.

**அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே**!

சிலவேளைகளில், **சுயநலத்தைத் தியாகம்** செய்வதன் மூலம் மிகப் பெரிய அளவிலான தியாகத்தைச் செய்து விட முடியும் என இஸ்லாம் நமக்கு நினைவூட்டுகிறது. எனவே, நமது ஓரிறை நம்பிக்கையின் வழிகாட்டுதலின் பிரகாரம், மற்றவர்களின் தேவைகளைக் கவனத்தில் கொள்வதற்கும், நமது நலனையும் நம்மைச் சுற்றியுள்ளவர்களின் நலனையும் கவனத்தில் கொள்வதில் **சமநிலையாக** நடந்து கொள்வதற்கும் நமக்கு நாமே பயிற்சியளித்துக் கொள்வோமாக!

கிருபையையும் நன்மையையும் தொடர்ந்து பரப்புகின்ற, ஒருவர் மற்றவருக்கு நன்மை செய்து கொள்வதற்கு **முன்னுரிமையளிக்கின்ற**,

கருணைச் சிந்தனையையும் ஒற்றுமையையும் அடிப்படையாகக் கொண்ட சமுதாயத்தை உருவாக்க முயற்சிக்கின்ற மக்களில் ஒருவராக நாம் ஆகுவோமாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الْغَفُوْرُ الرَّحِيْمُ.

## இரண்டாவது பிரசங்கம்

الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ الله، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَال فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيٍّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنهُم وَالأَموَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلَاءَ وَالوَبَاءَ وَالحَرْبَ وَالِاعْتِدَاءَ. اللَّهُمَّ إِنَّا نَسْتَوْدِعُكَ أَنْفُسَنَا وَأَهْلَنَا وَبِلَادَنَا، وَنَعُوذُ بِكَ مِنْ شُرُورِ الْمُفْسِدِينَ، وَكَيْدِ الْمُعْتَدِينَ، وَظُلْمِ الظَّالِمِينَ. اللَّهُمَّ إِنَّا نَجْعَلُكَ فِي نُحُورِهِمْ، وَنَعُوذُ بِكَ مِنْ شُرُورِهِمْ.

اللَّهُمَّ يَا مُنْزِلَ الْكِتَابِ، وَيَا مُجْرِيَ السَّحَابِ، وَيَا هَازِمَ الْأَحْزَابِ، اهْزِمِ الْأَحْزَابَ، وَانْصُرْ إِخْوَانَنَا الْمُسْتَضْعَفِيْنَ فِي غَزَّةَ وَفِي فِلَسْطِيْنَ وَفِيْ كُلِّ مَكَانٍ عَامَّةً، يَا أَرْحَمَ الرَّاحِمِيْنَ. اللَّهُمَّ بَدِّلْ خَوْفَهُمْ أَمْنًا، وَحُزْنَهُمْ فَرَحًا، وَهَمَّهُمْ فَرَجًا، يَا رَبَّ العَالَمِيْنَ. رَبَّنَا آتِنَا فِي الدُّنْيَا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنَا عَذَابَ النَّارِ.

عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسَانِ وَإِيتَاءِ ذِي الْقُرْبَى، وَيَنْهَى عَنِ الفَحْشَاءِ وَالْمُنكَرِ وَالبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذْكُرُوا اللهَ العَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِن فَضْلِهِ يُعْطِكُم، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ.